JAFFNA COLLEGE
UNDERGRADUATE LIBRARY
NOV 13 '67

செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

# இந்து சாதனம்

சிவமயம்

சைவபரிபாலனசபை வெளியீடு. பிரதி விலை: சதம் 10.

ஆரம்பம்: விரோதி௵ (1889) ஆவணி மீ 28உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

[புத்-எகூ] யாழ்ப்பாணம்:- பிலவங்க௵ ஐப்பசிமீ உச உ வெள்ளிக்கிழமை (10-11-1967) [இல-நக]

# அன்னை அபிராமியின் அருள்பெருகு திருவளம்

[ ஆசிரியர் க. வை. ஆத்மநாதசர்மா ]

( முற்றொடர்ச்சி — 2 )

## 2. திரிபுர சுந்தரி

அன்னை அபிராமி தேவிக்குத் திரிபுரசுந்தரி எனவும் ஒரு திருப்பெயர் அமையும். அபிராமம்—அழகு; சுந்தரம் — அழகு. எனவே அளக்க வொண்ணாத அழகுடையவர் — அபிராமி, சுந்தரி. திரிபுரம் என்பது திரிபுர சக்கிரத்தைக் குறிக்கும். தேவி சக்கிரத்தில், சந்திர கண்டம், அக்கினி கண்டம் சூரியகண்டம் என்னும் மூன்றும் திரிபுரங்கள் எனப்படுவன. திரிபுர சக்கிரத்துக்கு அதி தேவதை திரிபுர சுந்தரி. அன்னை திருக்கரங்களிலே குளிர்ச்சிபொருந்திய மலர்ப் பாணங்கள், கரும்பு வில்லு, மெல்லிய பாசக் கயிறு தோட்டி என்பன அழகு ஒளிர விளங்குகின்றன. அத்துணை அழகு வாய்ந்த அன்னை அபிராமி எமக்கு உயிர்த்துணையாகிறார்; வழிபடு கடவுளாகிறார்; எம்மைப் பெற்ற தாயாகிறார்; அவ்வளவோடு அமையாது வேதம் எனப்படும பெருமரத்தின் கிளைகளாகிறார்; அவை தழைத்து ஓங்கும் உபநிடதங்களாம் குருத்தாகிறார்; ஓங்காரமாகும் அதன் மூல வேருமாகிறார். இந்த இரகசியங்களை யெல்லாம் திருவருள் வாயிலாக அறிந்து கொண்டோம்.

## 3. திருவடிக்கே சேறிந்தேன்

திருவருட் செல்வியாகிய அபிராமி தேவியே! எவரும் அறியாத வேத இரகசியங்களை யெல்லாம் திருவருள்வாயிலாக அறிந்துகொண்டேன். அங்ஙனம் அறிந்த பின், தேவரீருடைய மெய்யன்பர்களது பெருமையைப் பழவினைப் பயனால் மதிக்காத பாவ மனங் காரணமாகக் கொடிய நரகத்திலே தலைகுப்புற விழும் மனிதரது கூட்டுறவை அஞ்சி விட்டுப் பிரிந்தேன். அவ்வாறு அவர்களை விட்டுப் பிரிந்த பின் பிறவி நோய்க்கு அஞ்சித் தேவரீருடைய திருவடிகளுக்கே அடைக்கலமாக வந்தடைந்தேன். தமியேனைக் காத்தருளுவது தேவரீரது கடனன்றோ!

## 4. என் புந்தி எந்நாளும் பொருந்துக

என்றும் மாறாத இளமையும், அழகும் ஒருங்கமைந்த சிவந்த திருவடிகளையுடைய அபிராமிதேவியே! மயக்க உணர்வுகொண்ட மனிதரும தேவரும் தலை தாழ்ந்து தேவரீரை வணங்குகிறார்கள். அவ்விருபாலாரையும போல மயங்காத முனிவர்களும் வந்து தேவரீரது திருவடிகளிடத்தே அடைக்கலமாகிறார்கள். ஆனால், தமியேனது மனமோ நிலை தடுமாறிச் சலிப்பது. அதனை நிலையுறுத்தும்பொருட்டுத் தமியேனது விண்ணப்பத்தைச் செவி மடுத்தருளுக, கொன்றைப் பூமாலை புனைந்த நீண்ட சடா முடியில் குளிர்ச்சி பொருந்திய பால சந்திரனையும் பாம்பையும் கங்காநதியையும தாங்கியருளும் புனிதராகிய சிவபிரானும் தூயவராகிய தாயே! தேவரீரும் தமியேனது மனத்தில் தியானப் பொருளாக எக்காலமும் எழுந்தருளுவீராக.

## 5. சுந்தரி பாதம் என் சென்னியது

உயிர் தரிப்பதற்கு ஆதாரமாக மூவகை உடம்புகள் உள்ளன. அவை தூல சரீரம், சூக்கும சரீரம் காரண சரீரம் எனப்படுவன. அம் மூவகை உடம்புகளிலும் நிறைந்திருப்பது திரோதான சக்தி. பரஞானம் அபரஞானம எனப் போற்றப்படும், மாணிக்கச் சிமிழ்போன்ற அழகிய தன பாரச் சுமையால்

தொடர்ச்சி 2- ஆம் பக்கம்

உ
சிவமயம்

கருவாய்க் கிடந்துன் கழலே
நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றனாமம்
பயின்றே னுனதருளால்
திருவாய் பொலியச் சிவாய
நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதிநீ பாதிரிப்புலி
யூரரனே

-திருநாவுக்கரசு சுவாமிகள்.

### நாவலர் நல்வாக்கு

நம்முடைய செயல்கள் அனைத்தும் சுருதிக்கும் யுக்திக்கும் இசைந்திருக்க வேண்டும். ——

நேயர்கள் நெஞ்சம்

# 1967- ஆம் ஆ திருவாதிரைத் திருநாள்எப்போது?

யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கத்தில் கார்த்திகை மாதம் 23-ஆந் திகதி (9-12-67) சனிக்கிழமை திருவெம்பாவைப் பூஜாரம்பம் எனவும் மார்கழி மாதம் 2-ஆந் திகதி (17 - 12 - 67) ஞாயிற்றுக்கிழமை இரவு நடேசர் அபிஷேகம் எனவும், அடுத்த நாளாகிய திங்கட்கிழமை காலை நடேசர் ஆருத்திரா தரிசனம் எனவும் குறிக்கப்பட்டிருக்கின்றது. ஆனல்; கஞ்சனூர் சுத்த வாக்கிய பஞ்சாங்கத்திலும் ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கத்திலும் ஆர்க்காடு பஞ்சாங்கத்திலும், வேறு பஞ்சாங்கங்களிலும் மார்கழி மாதம் 30-ஆந் திகதி (14 - 1 - 68) ஞாயிற்றுக்கிழமை ஆருத்திரா தரிசனமெனக் குறிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாங்கங்கள் முரண்படுவதனல் ஆருத்திரா தரிசன நாள் சமபந்தமாக ஒருமுடிவுக்கு வரமுடியாமல் சைவ உலகம் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறது. ஆகையால், எந்தத் திகதியில் ஆருத்திரா தரிசனம் நிகழுவது சாஸ்திர சம்மதமென்பதை அறிஞர்கள் பத்திரிகை வாயிலாக அறிவித்தால், அது சைவமக்களுக்குப் பெரும் பயனளிக்கும்.

க. வைத்தீஸ்வரக்குருக்கள்
துணைவி.

# பாவநாசத் திருக்குறுந்தொகை

திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை (மாவை)

தினமும் நித்திரைவிட்டெழுந்ததும் காலைக் கடன்களை முடித்து, இறைவனைத் தியானிக்கும்வகையில் மூவர் அடங்கன்திருமுறையை இருகரங்களினாலும் பயபக்தியோடு எடுத்து நாள்ஒன்றுக்கு ஒரு பதிகமாகப் படிக்கலாமல்லவா? ஒருவன் தனது வாழ்வில் எத்தனை நாட்களைக் கடந்து மரணவாயிலைத் தாவுகின்றான். எதற்கும் பின் போடும் பழக்கம் உள்ளவர்கள் ஆண்டவனை நினைக்கவும் பின் போடுவார்கள். அவ்வாறில்லாமல், தினமும் தேவாரத்தை உற்றுணர்ந்து உருகி ஊறி ஓதிக்கொண்டு வரும்போது பிறவிக் கடலில் அழுந்தாது இறைவனடிசேர ஒரு வாய்ப்புக் கிடைக்குமே! மூவர் தேவாரங்களில் அடங்காத அருட் செல்வம் வேறு எங்கு தேடினும் கிடையாதல்லவா?

இறைவனை நாயன்மார்கள் எவ்வாறு வாயாரப் போற்றிப் புகழ்ந்து இறைஞ்சினார்கள் என்பதனை தேவாரத்தை அருள் துணை கொண்டு ஓதுகின்றவர்கள் நன்குணர்வார்கள். "வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர் இனத்தகத்தான்" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் ஒரு பதிகத்தில் சொல்லுகின்றார்; உள்ளமானது அன்பினால், கசிந்து உருகிச் "சிவனே! சிவனே! என்று மெள்ள உரைத்தாலே எங்களைப்பற்றிய வினைகள் யாவும் நீங்கும்! இது உண்மை!

"உள்ள மூள்கி யுகந்து சிவனென்று
மேள்ள வுள்க வினைகெடு மெய்மையே
புள்ளினார் பணி புள்ளிருக்கும் வேளூர்
வள்ளல பாதம் வணங்கித் தொழுமினே"

பிறவிகள் தோறும் எங்கட்குத் துணையாக இருப்பவனை, நாவினால் எடுத்துரைக்கும் சொல்லுக்கு உறுதுணையானவனை, அருட்பெருஞ் சோதியாக உள்ளவனை, தினம் வந்தித்து, உள்ளம் கசிந்து நிற்பவர்கட்கு என்றும் நல்ல துணையாக இருப்பார் திருநனி பள்ளியில் எழுந்தருளியுள்ள எம்மிறைவன் என்று அருளும் திருவருட் பாவையும் பாருங்கள்!

"முற்றணை யாயினானை மூவர்க்கு முதல்வன் தன்னைச்
சொற்றுணை யாயினானைச் சோதியை யாதரித்து
உற்றுணர்ந்து உருகி யூறி உள்கசி வுடையவர்க்கு
நற்றுணை யாவர் போலு நனிபள்ளி யடிகளாரே".

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த திரு அருட் பாக்களில், பாவநாசத் திருக்குறுந் தொகை, ஐந்தாந் திருமுறையில் உள்ளது. உலகத்துள்ளோரை விழித்து, பல வழிகளில் அலமந்துபோகும் மாந்தர்களைப் பார்த்து வினவுகின்றார்! இப் பதிகத்திலுள்ள பத்துத் திருப்பாக்களும் எங்கள் அறிவுக்கு நல் விருந்தாக அமைந்துள்ளது. படித்தின்புற வேண்டிய பாடல்கள். இறைவன் ஞானக்கொழுந்தாய், இன்பப் பிழம்பாய், அமுத சுரபியாய் உள்ளான். அன்புடன் அவனடி வணங்காவிடின்;

ஒருவன் கங்கையில் நீராடி லென்! குமரித்துறையில் ஆடினும் என்! சமுத்திர தீர்த்தமாடி லென்! பட்டம் பெற்றவராகிலென்! சாத்திரம் அறிந்தவராகிலென்! வேத மோதி யென்! சாத்திரங் கேட்டுமென்! நீதி நூல்களை நித்தலும் பயின்றுமென்! உடம்பை வருத்தியென்! பட்டினி யிருந்துமென்! மலைமேல் ஏறித் தவம் செய்துமென்! சுவாமிகள் கூறுகின்றார்கள்!

"கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக் கன்பில் லையேல்
ஓடு நீரினை யோட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்க னோடொக்குமே!".

தொடர்ச்சி 2-ம் பக்கம்

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

# இந்துசாதனம்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

பிலவங்க ஞூ ஐப்பசிமீ உச-உ வெள்ளிக்கிழமை [1967]


## பல்கலைக்கழக விவாதம்

நமது நாட்டினது உயர்தரக் கல்வி நிலையமாகவுள்ள பல்கலைக்கழக நிருவாகம் யாவருக்கும் கவலையையளிக்கின்றது. இலங்கைப் பல்கலைக்கழகம் இரு பிரிவுகளாகப் பேராதனையிலும் கொழும்பிலும் ஒரு உபவேந்தருடைய நிருவாகத்தில் இதுவரையில் இயங்கிவந்தது. பேராதனையில் கடமையாற்றும் உபவேந்தர் இருபிரிவுகளையும் தன்னால் நிருவகிக்க இயலாதென்ற கருத்தைத் தெரிவித்தபின், கல்விமந்திரியவர்களால் பல்கலைக்கழகக் கல்விமுறையில் நிபுணராகவுள்ள கிழக்கு அங்கிலியாப் பல்கலைக்கழக உபவேந்தர் ஸேர். பிரூன்க்திசில்த்வத் என்பவரை இந்நாட்டுக்கு அழைக்கப்பட்டனர். அவருடைய ஆலோசனையின்படி இரு பல்கலைக்கழகங்களை அமைக்கும் தீர்மானம் நிறைவெய்தியது. ஒன்று பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றையது கொழும்பு பல்கலைக்கழகம் இரண்டாவது பல்கலைக்கழகத்துக்குத் தேவையான உபவேந்தர் பேராசிரியர்கள் அதிகாரசபை எல்லாம் நிறுவப்பட்டனர். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சேரும் மாணவ மாணவிகளுக்குத் துரதிஷ்டமாக ஒருபீதி ஏற்பட்டுவிட்டது. எதிர்காலத்தில் தங்கள் கல்விபயிலும் பல்கலைக்கழகம் தரம்குறைந்ததாக நாட்டில் மதிக்கப்படும். அதனால் தாங்கள் பெறும் பட்டங்களுக்குச் செல்வாக்கில்லாமற்போய்விடுமென்று கருதித் தங்களுக் களிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தைப் பகிஷ்கரிக்கத் தீர்மானஞ் செய்தனர். ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் நடத்தித் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள்.

கல்விமந்திரியவர்களுக்கு இப் பல்கலைக்கழக விவாதம் ஒரு பெருந் தலையிடியாகிவிட்டது. மாணவ மாணவிகளுக்குத் திருப்தியளிக்கும் நோக்கத்துடன் இரு பல்கலைக் கழகங்களை அமைக்கும் திட்டத்தைக் கைவிட்டுப் பழையபடி இரு பிரிவுகளைக்கொண்ட ஒரு பல்கலைக்கழகத்தையே நடத்த முடிவுசெய்துள்ளனர். இந்தமுடிவும் மாணவ மாணவிகளுக்குத் திருப்தியளிக்கவில்லை. பேராதனைப் பலகலைக்கழக உபவேந்தரும் இருபிரிவுகளையும் தன்னால் நிருவகிக்கமுடியாதெனத் தீர்க்கமாகக் கூறிவிட்டனர்.

கல்விமந்திரியவர்கள் பல்கலைக்கழக மேற்சபை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தேசிய உயர்தரக் கல்விச்சபை போன்ற தாபனங்களின் ஆலோசனையின்படி இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனை இலங்கைப் பல்கலைக்கழகம் கொழும்பு என்ற நாமங்களுடன் இரு பல்கலைக்கழகங்களையும் அமைத்திருப்பாரானால் இந்தப் பகிஷ்கரிப்பு இயக்கம் தோன்றியிராது. கல்விமந்திரியவர்கள் பிறருடைய புத்திமதியைப் பின்பற்றாது தன் இஷ்டப்படி செயலாற்றுவதையிட்டு வருந்துகின்றோம்.

பிரதம மந்திரியவர்கள் இவ்விவாதத்தைத் திருப்தியானவகையில் தீர்த்துவைக்கும் நோக்கமாக 6-11-67ல் பாராளுமன்றத்தில் ஒரு அறிக்கை சமர்ப்பித்தனர் கொழும்பில் நிறுவப்படும் பல்கலைக் கழகத்திற்கும் பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கும் சம அந்தஸ்து வழங்கப்படுமெனவும் அவ்விதமான ஒழுங்கினை ஏற்படுத்துவதற்குத் தேவையான நிதி வசதிகளை யுண்டு பண்ணுவதுடன் சட்டங்களையும் அமைப்பதாகவும் அவ்வறிக்கையில் அவர் தெரிவித்து சம்பந்தப்பட்ட மாணவ மாணவிகளைத் தங்கள் கல்விப் பயிற்சியை ஆரம்பிக்கும்படியும் கேட்டுக்கொண்டனர். யாவருக்கும் திருப்தி யளிக்கக்கூடிய முறையில் பல்கலைக்கழக நிர்வாகத்தை அமைக்கும் நோக்கமாகப் பிரபல கல்விச் சபைகளதும் கலவி நிபுணர்களதும் அபிப்பிராயங்களையும் தாம் பெற விரும்புவதாகவும் அவர் தெரிவித்தனர். பிரதம மந்திரியவர்கள் முயற்சி ஒரு திருப்தியான ஒழுங்கினை ஏற்படுத்துமென எதிர்பார்க்கின்றோம்.

## திருஅருணாசலக் கார்த்திகைவிளக்கீடு

[யாழ்ப்பாணம் மேலைப் புலோலி ஸ்ரீமத் நா. கதிரவேற்பிள்ளையவர்கள் ஆற்றிய உபந்நியாசம். "சைவம்' என்னும் சஞ்சிகையில் முற்காலத்தில் பிரசுரமானது )

பிரம னரி யென் றிருவருந்தம் பேதைமையாற்
பரம மியாம் பரம மென்றவர்கள் பதைப்போடுங்க
வரனு ரழலுருவா யங்கே யளவிறந்து
பராமா கிநின்றவா தோணேக்க மாடாமோ.

என்பது திருவாசகம்

இந்த ஞானதீபக் காட்சியாகிய மகா விழாவானது இக் கார்த்திகை மாதத்தில் வரலால் அதுபற்றி நம் நண்பர்கள் பற்பலர் அறிதற்கு அவாவுறுவர் இத் தீபக் காட்சியைக்கண்டு ஆனந்தித்தவாது கண்களே கண்களெனப்படும். அல்லாத கண்களெல்லாம் புண்களெனப்படும். அவை மரக்கண், பீலிக்கண், மட்பாண்டக்கண், நிலக்கண், எனப்பட்டு ஒருசிறிதும் பயனிலவாம் என்க. இது சிவபெருமான் உலக முழுதும் சோதி வடிவாய் விளங்கின்றமையால் அதற்கு அறிகுறியாக எவ்விடத்தும் தீபமிட்டுத் தரிசிக்கும் வழக்காம. இதனையே வைணவர்களும் ஏற்றுத் தங்கள் ஆலயங்களிலும் தீபம் ஏற்றிவைக்கின்றார்கள் புறச்சமயிகளாலும இது புகழப்பட்டு அனுஷ்டிக்கப்படுகின்றது, புறச்சமய நூலென்னும் சீவகசிந்தாமணியிலும்,

"நாம்போலி தரும தத்தன்
றக்கவாறுரைப்பக் குன்றிற்
கார்த்திகை விளக்கிட்டன்ன
கடிகமள் குவளைப்பைந்தார்
போர்த்ததன் னகலமெல்லாம்
பொள்ளெனவியர்த்துப்பொங்கி
நீர்க்கடன் மகரப் பேழ்வாய்
மதனன்மற்றிதனைச்சொன்னான்'

என்று பேசப்பட்டிருக்கிறது. உலகத்திலும் "மலைமிவிட்டவிளக்கு" என்று வழங்கும் முதுமொழியானும் இதன் பெருமை புலப்படும், திருவருணாசலமே இதற்குரிய விசேடதலமாகலின் அதனையும் பற்றியுரைப்பாம், திருஅருணாசலம் என்பது தொண்டைநாட்டு முப்பத்திரண்டு சிவஸ்தலங்களுள் ஒன்று "தெண்ணீர் வயற்றொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்று தெய்வப்புலமை ஔவைப்பிராட்டியாரால் சிறப்பிக்கப்பட்ட இத் தொண்டைநாட்டில், முப்பத்திரண்டு தலம் வந்ததற்குக் காரணம என்னவென்று ஆராயுமிடத்து, இறைவி உலகமுய்வான் ஈண்டு வந்து முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்தருளினள் என்று முந்துநூல்கள் முழங்கலான், அதற்கு அறிகுறியாகத் தலங்களும் முப்பத்திரண்டாயின வென்பர் பெரியோர். உலகத்திலேயுள்ள எல்லாத்தலங்களினும் ஆயிரகோடி சிவஸ்தலங்களே விசேஷித்தன. அவற்றினும் ஆயிரத்தெட்டுத் தலங்களே விசேஷம். அவற்றினும் நூற்றெட்டு சிவஸ்தலங்களும் அவற்றினும் தெய்வத் தலங்களாகிய அறுபத்தெட்டும், அவற்றினும் அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை, என்னும் சத்தமுத்தித் தலங்களும் உயர்ந்தனவாம். அவற்றினும் பஞ்சபூதத் தலங்களே யுயர்ந்தன. அவற்றினும் பிறக்க முத்திதரும் தலமாகிய திருவாரூரும், இறக்க முத்திதரும் தலமாகிய காசியும், நினைக்க முத்திதரும் தலமாகிய திருவண்ணாமலையும் சிறந்தனவாம். பிறத்தலும் இறத்தலும் கிடைத்தல் ஒருவர்க்கு முறபுண்ணியம் இருந்தாலன்றி யாகாவாம் நினைத்தல் யாவர்க்கும் எளியதாகலின் அது செய்த மாத்திரத்தே சிவசாயுச்சியத்தை யளிக்கும் இத் திருவருணாசலத்தின் மகிமை செப்புந் தரத்ததோ? தத்துவங் கடந்த தனிமுதற் பொருளாகிய பர சிவனே இத் தலமாக விளங்குவான் எனில், அதன் பெருமையை யாவரே யளக்க வல்லார்.

x x x

(வளரும்)

## புதிய தேர் திருப்பணி

புன்னாலைக்கட்டுவன் ஆயக் கடவை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய புதிய தேர்த்திருப்பணிக்குரிய நாளவேலை சென்ற 8-11-67 புதன்கிழமை பக்தகோடிகளின் ஆதரவுடன் ஷை ஆலயத் திருவீதியில விஷேஷ ஆராதனைகளுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஷை தேரை ஒருலட்ச ரூபா செலவில் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஷை ஆலயத்தில் கந்தசஷ்டித் தினங்களை முன்னிட்டு ஆறு நாட்களும் பெருமானுக்கு விஷே அபிஷேக ஆராதனைகளும் கந்தசஷஷ்டி பாராயணமும் திருச்செந்தூர்ப் புராணபடனமும் பக்தர்களின் ஆதரவுடன் வெகு சிறப்பாக நடைபெற்றன.

## அன்னை அபிராமியின்

( 1ம் பக்கத் தொடர்ச்சி)

அழுந்தும் நுண்ணிய இடையினை யுடையவர் மனோன்மணிதேவி. நீண்ட திருச்சடை முடியை உடையவராகிய சிவபிரான் திருமிடற்றில் அடக்கிய ஆலகாலமென்னும் கொடிய விஷத்தைத் தமது திருக்கைகளால் அமுதாக்கியவர் உமையம்மையார். திரோதான சக்தியாகவும் மனோன்மணியாகவும் உமையம்மையாகவும் பொருநதிச் சிதாகாச ரூபியாய் விளங்குபவர் பராசக்தியேயாவர். இத்துணைச் சிறப்பெல்லாம் ஒருங்கமைந்த அழகிய அபிராமி தேவியாரது செந்தாமரை மலரினும் மேலாம் வனப்பு வாய்ந்த திருவடி தமியேனது தலையிற் பொருந்தியுள்ளது.

(வளரும்)

## பாவநாசத் திருக்குறுந்தொகை

[ 1-ம் பக்கத் தோடர்ச்சி ]

அன்பில்லாத வழிபாட்டைச் சிறந்த உவமையினால் விளக்குகின்றனர்.

"பத்தி வலையிற் படுவோன் காண்க"
"நூலுணர் உணரா நுண்ணியோன் காண்க",

மாணிக்கவாசகவள்ளல் அருளியவாறு இறைவனை நூல்கள் பல கற்று உணர முடியாது. அவரை எமது அகத்துள் வைக்க வலை ஒன்றுளது. அதுவே பக்திவலை. அதனை அவர்பால் மெல்ல வீச வேண்டும். அவர் தானாகவே வந்து அகப்படுவார். சிக்கெனப் பிடித்தால் அவர் எவ்வாறு மீள்வார்!

பிறவிகள் தோறும் செய்த பாவங்கள் பாறும் வண்ணம் காதலாகிக் கசிந்து பாடி ஆடிக் கண்ணீர் சிந்தி, பித்தனாக மாறினால் மதியைச் சூடியவரும் மன்மதனை எரித்தவரும், எமனை உதைத்தவருமாகிய எம்மிறைவன் எங்களை ஆட்கொள்ளுவார்!

கல்லோடு கட்டினார்களே! புற சமயப் பாதகர்கள்! அப்போது நெல்வயல் சூழ்ந்த திரு நீலக் குடியில் எழுந்தருளியுள்ள அரனை நல்ல நாமங்கள் எடுத்து நவிற்றி நான் உய்ந்துபோகவில்லையா! மாந்தர்களே! மயக்கமேன்? என உலகத்தவர்களை விளிக்கின்றனர். மேலும் அவருடைய அமிர்தமான வாக்கைக் கவனிப்போம்.

"கல்லினோ டெனைப் பூட்டிய மண்ணையர்
ஒல்லைநீர் புக நூக்கவென் வாக்கினால்
நெல்லுநீள் வயல் நீலக்குடி யரன்
நல்ல நாம நவிற் றியுய்ந் தேனன்றே"

எமையாளும் ஈசன், அப்பர் சுவாமிகள் பொருட்டுச் செய்த அற்புதங்களையும் திருஅருட் செயல்களையும் அவர் வாக்கினால் எவ்வாறு உரைக்கின்றார்!

"எங்கே யென்னை யிருந்திடந் தேடிக் கொண்
டங்கே வந்த டையாளம ருளினார்
தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனா தென் கொலோ!"

என்று வாயாரப் பாடி ஆனந்தக் கடலுள் மூழ்கி, எம் மனோரையும் மூழ்கித் திளைக்க வைக்கின்றார்.

## புதிய செனற்றருக்குக் குதூகல வரவேற்பு

—0—

மூதவைப் புதிய உறுப்பினர் உயர்திரு. த. நீதிராசா அவர்களுக்கு, வயாவிளான் மானம்பராய்ப் பிள்ளையார் கோவிலில் சென்ற திங்கட்கிழமை (6–11–67) மாலை 4 மணியளவில் அப்பகுதி மக்களால் பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. சி. கந்தசாமி அவர்களின் தலைமையில் மகத்தான வரவேற்பு நிகழ்த்தப்பெற்றது. முதலாவதாக பிரார்த்தனை நிகழ்ந்து வந்தனோபசார வாழ்த்துப்பாக்கள் வாசித்து வழங்கப்பட்டபின், வழக்கறிஞர் திரு. வ. இராசநாயகம் J. P. அவர்கள் செனெற்றர் நீதிராசா அவர்கள் உதாரகுணம்படைத்த சைவாபிமானி என்றும், சிங்களர்–தமிழர் ஒற்றுமையை வளர்க்கும் சிறந்த தேசியவாதி என்றும் அதிக வாக்குகளால் அவர் மூதவையினருக்குத் தெரிவு செய்யப்பெற்றமை அவரது பொதுசன ஆதரவையும் அரசியற்செல்வாக்கையும் நன்கு விளக்குகின்றன என்றும் கூறினர். அன்னாரைக் கௌரவித்து மேலும் பலர் உரையாற்றினர். ——

## கலைவாணியின் வெண்கலச் சிலை!

யாழ்ப்பாணத்தில் புதிதாய் அமைக்கப்பட்டுள்ள நூல்நிலையத்தின் கண்காட்சி தரும கலைக்கூடத்தில் கலைவாணியின் வெண்கலச் சிலை ஒன்றினைத் தாபிக்கும்படி ஸ்தல ஸ்தாபன அமைச்சர் கௌரவ மு. திருச்செல்வம் அவர்கள் பணித்துள்ளனர்.

"வெளியிடங்களில் சிலை அமைப்பது தெய்வத்துக்கு அவமரியாதை செய்வதுபோன்றதென்றும் புனிதமான இடத்திலே சிலையை அமைத்தலே தக்கது என்றும்" கூறினர்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல 5282 / A

ஆறுமுகம் இரத்தினசபாபதி சிறுப்பிட்டி —வழக்காளி.

எதிராக

1. விசுவநாதர் அருணாசலம் பெண்
2. வள்ளிப்பிள்ளை இருவரும் சிறுப்பிட்டி. —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் நீதிவன்ற கோட்டின் 5282 / A - ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1967-ம் ஆண்டு டிசெம்பர் (மார்கழி) மாதம் 29-ந் திகதி (29–12–67) வெள்ளிக்கிழமை முற்பகல் 10–00 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 586–66 ம் 14–8–66 தொடக்கம் 7–4–67 வரைக்கும் ரூபா 400-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 61–25.

காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் கிழக்கு புத்தூர் கோவிற்பற்று சிறுப்பிட்டியிறை 'தேவ ஓடை' நெற்பரப்பு 15, இதற்கு எல்லை கிழக்கு அருணாசலம் பெண் தங்கம்மாவுக்கும் மற்றும்பேருக்கும் உரிய ஆதனம். வடக்கு தம்பிராசா பெண் தெய்வானைப் பிள்ளையின் ஆதனம். மேற்கு காசுத்திகேசு ஆறுமுகத்தின் ஆதனம். தெற்கு அருணாசலம் பெண் தங்கம்மாவின் ஆதனம். இதடங்கலும்.

கா. தர்மலிங்கம்,
கொமிசனரும்விலைமதிப்பாளரும்,
உரும்பிராய், 21-10-67.
எம் 306 10—11—67

## திருமூல நாயனர் குருபூசை

வழமைபோல யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஐப்பசி மீ உகூ-உ (15-11-67) புதன்கிழமை இரவு 7 மணிக்கு திருமூலநாயனர் குருபூசை நடைபெறும்.

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

சைவபரிபாலன சபை, மு. மயில்வாகனம்,
யாழ்ப்பாணம், 5-11-67. சமயப்பிரசார அமைச்சர்.

ஐப்பசி 30-உ (16–11–67) வியாழக்கிழமை சர்வாலயதீபமும் அடுத்த நாள் வெள்ளிக்கிழமை குமராலயதீபமும் நடைபெறும்.

x x x

12–11–67 உத்தான ஏகாதசிவிரதம், 14–11–67 ஜவஹர்லால்நேரு ஜனனதினம் 17–11–67 குமராலயதீபம், விநாயக விரதாரம்பம், திருக்கார்த்திகை. 20–11–67 திருக்கேதீச்சரம் சங்காபிடேகம்

x x x

சீரணி நாகம்மாள் ஆலயத்திலிருந்து, நல்லூர் பூனகரிமார்க்கமாக திருக்கேதீச்சரத்துக்கு இன்று செல்லவிருந்த பசனைப் பாதயாத்திரை தொடர்ந்து பெய்யும் மழை காரணமாகப் பின்போடப்பட்டுள்ளதாக நல்லூர் பசனைச்சபை தேரிவிக்கிறது. (ந. நி.)

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

வழக்கு, இலக்கம்: M. B 7612

உரும்பிராய் கந்தையா சபாரத்தினம் —வழக்காளி

எதிராக

உரும்பிராய்தெற்கு (அன்னுங்கை) 1. பொன்னையா கனகசிங்கமும் பெண் 2. சிவபாக்கியமும் —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 7612 -ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 3 துண்டுக் காணிகளை 1967-ம் ஆண்டு மார்கழி மீ 12-ந் திகதி செவ்வாய்க்கிழமை (12-12-67) முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:– முதல் வட்டி ரூபா 2557–50-ம் 13–8–65 தொடக்கம் 31-5-66 வரைக்கும் ரூபா 1800 -க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 278–20 ம்.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று உரும்பிராய் இறை காட்டுப்புலவை" பர நில இலச்சம் ஒன்று குளி ஒன்பதுடன் பதினறில் ஐந்து (பர நில இலா 1 குளி 9, 5/16) பயிர்வகைகளும் இக்காணிக்குளிருக்கும் கிணற்றிற் பங்கும். எல்லை கிழக்கு முத்துக்குமாரு பெண் செல்லம்மாவினுதனம். வடக்கு வேலுப்பிள்ளை பெண் கண்மணிக்கும் பங்காளருக்கும் குருசாமி பெண் செல்லம்மாவுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு றோட்டு தெற்கு இக்காணியின் மிகுதி ஆதனம். இக் காணிக்குக் கிழக்குப் புறமாக தெற்கெல்லைக் காணிக்குரிய 3 முழ அகலமான வழிப்பாதை புறநீங்கலாக இதடங்கலும்.

2, ஷை உரும்பிராய் இறை சேர்க்கற்புலம்" பர நில இலச்சம் நாலேகால் (பர நில இலா 4, 1/4) பயிர்வகைகளும் எல்லை கிழக்கும் வடக்கும் வேலுப்பிள்ளை பெண் கண்மணிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு தம்பு பெண் நாகரத்தினத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள். தெற்கு ஒழுங்கை. இதடங்கலிற் சொரியலாய் $\frac{1}{4}$ நாலிலொரு பங்கு.

3. ஷை உரும்பிராய்இறை "பரத்தைப்புலம்" பர நில இலச்சம் ஐந்து (பர நில இல. 5) இக்காணிக்கருகே யிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் துரவை வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை கந்தையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஒழுங்கை ஆதனம். வடக்கு இக்காணியின் மிகுதி ஆதனம் மேற்கு செல்லப்பா கந்தையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு குருசாமி பெண் செல்லம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலில் இக்காணியின் மிகுதிப் பாகத்துக்குரிய வழிவாய்க்கால் பாவிப்புரித்து புறநீங்கலாக மிகுதியடங்கலும். அத்துடன் இக்காணியின் மிகுதிப் பாகத்தின் மேற்கருகாக வழிப்பாதைப்பாவிப்புரித்தும்.

துவாரகை, அ வெற்றிவேலு,
கச்சேரி நல்லூர் வீதி, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
யாழ்ப்பாணம், எம் 303 10—


யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 7 விகிதமும் 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை J. P.
சிறுப்பர்.

Std. 14.


### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M B 11439, D. C. J.

1. சின்னத்தம்பி செல்லத்துரை 2. விநாயகமூர்த்தி கைம்பெண் நாகம்மா புன்னாலைக்கட்டுவான், —வழக்காளிகள்

எதிராக

1. இராமலிங்கம் சந்திரசேகரம் மட்டுவில் தெற்கு,
2. நல்லநாதர் காசிநாதர் புத்தூர் மேற்கு,
3. P. பொன்னம்பலம் நீர்வேலி, — எதிராளிகள்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11439-ம் இலக்க வழக்கில் எனக்குககிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுககாணி 1967–ம் ஆ கார்த்திகை மீ 25-ந் உ சனிக்கிழமை பகல் 10, 12, 2, 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 2985 ம் 27-7-54 தொடக்கம் 7-10-54 வரைக்கும் ரூபாய் 2000-க்கு 6 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 203-30 சதம் ஏற்பட்ட செலவு ரூபாய் 128-70 சதம் நிகழவிருககும் செலவு ரூபாய் 36/40 சதம் முடிவான செலவு ரூபாய் 37-20 சதம் முதல் வட்டியில் ரூபாய் 800 கட்டப்பட்டது கோட்டுச்செலவில் ரூபாய் 100 கட்டப்பட்டது.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவில்பற்று மட்டுவில் தெற்கு இறை, ஆவரஞ்சாட்டிவளவு 56¾ கிலப்பரப்பு வீடுகள் கிணறு வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கும் வடக்கும் இராமலிங்கம் சந்திரசேகரத்தினுதனம் மேற்கு ஒழுங்கை தெற்கு ஆறுமுகம் ஞானசேகரத்தினுதனமும் மறுவும் இதடங்கலும்.

2. மேற்படி இறை அரசடிவளவு 74, 1/2 கிலப்பரப்பு வீடும்கிணறும், வான்பயிர் செய்பயிர்களும் எல்லைகிழக்கும் வடக்கும் ஒழுங்கை. மேற்கு சின்னத்தம்பி சரவணையினுதனமும் மறுவும் தெற்கு சின்னத்தம்பி வேலுப்பிள்ளையும் மறுவும் இதடங்கலும்.

3. மேபடி இறை உப்பிரிவில் வயல் நெற்பரப்பு எல்லை கிழக்கு இராமலிங்கம் சந்திரசேகரததினுதனமும் சிவசுந்தரமாவலி புரக்கோவிலாதனமும் வடக்கு கதிரன் மகன் குஞ்சயினுதனமும் மறுவும். மேற்கு வாய்க்கால் தெற்கு இராமலிங்கம சந்திரசேகரத்தினுதனமும் சந்திரசேகரம் தாமோதரப்பிள்ளையினுதனமும்.

4. மேற்படி இறை கல்லுவயல் நெற்பரப்பு 32¾ எல்லைகிழக்கு கண்ணகையம்மன்கோவிலாதனம் வடக்கு கந்தர் கனகசபையினுதனமும் மறுவும் மேற்கு சந்திரசேகரம் இராமலிங்கத்தினுதனம் தெற்கு குளமும் சந்திரசேகரம் இராமலிங்கத்தினுதனமும். இதடங்கலும்.

இந்திரபவனம், மா. முருகேசு J. P.
புக்குடுதீவு, 6 கொமிஷனரும் விலைமதிப்பாளரும்,
4-10-67, 309, 10-11— )

### கோட்டு விற்பனவுவிளம்பரம

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

கோண்டாவில் வேளாயுதர் ஐயாத்துரை — வழக்காளி

இல. M B. 6229 எதிராக

சுதுமலை, நடேசு கந்தையா — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 6229-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1967-ம் ஆ மார்கழி மீ 13-ந் உ புதன்கிழமை 13-12-67 முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 3779 ம் 2–12–63 தொடக்கம் 30–7–65 வரைக்கும் ரூபா 3000–க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 349/40–ம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை "குரும்ப தோட்டம்" பர. நில. இலாச்சம். மூன்றரை ($3\frac{1}{2}$) எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு குட்டித்தம்பி வல்லிபுரத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் மேற்கு வயிரவகோயிலாதனமும் பொன்னையா கனகரத்தினத்துக்கும் பெண் சிவயோகநாயகிக்கு முரியவாதனமும் தெற்கு தெற்கு கையொழுங்கை பதிவு E. 335/289.

"துவாரகை" அ. வெற்றிவேலு
கச்சேரி நல்லூர் வீதி, கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.
யாழ்ப்பாணம், 22-10-67 (எம். 304 10-11-67)

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1. அல்பிறெட் பெயசிங்கம் துரைசாமியும்
2. அவர் மனைவி மங்களமலர் மானிப்பாய்

இலக்கம். M B. 8069 எதிராக — வழக்காளிகள்

1. காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை செல்லையாவின் மனைவியும் தனிப்பட்டமுறையில் சொந்தமானவரும் கோட்டால் நியமிக்கப்பட்ட பிரதிநிதியுமான கைம்பெண் சரஸ்வதி கணபதிப்பிள்ளை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 8069 -ம் இலகக வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்பட்டுள்ள ஒரு துண்டுக காணியை 1967–ம் ஆ மார்கழி மீ 29-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 2282–80 - ம் 21–3–66 தொடக்கம் 22–2–67 வரைக்கும் ரூபா 1875 -க்கு 9 சத வீதம் வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 சத வீதம் வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 265–49 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று மானிப்பாய் இறை 'கலட்டி' நிலப்பரப்பு 4-ம் 2 குளியும் வீடும் வான் பயிர் வளர்பயிர்களும் பனைகளும் வடலிகளும் கிழக்கு எல்லையிலிருக்கும் கிணற்றில் 1/3 தண்ணீர்ப் பங்கும் துரவைக்குப் போக்குவரத்து வழிவாய்க்கா லுருமையும். இதற்கு எல்லை கிழக்கு விஸ்லியம் அழகரத்தினத்தின ஆதனம். வடக்கு அமிர்தநாயகம் கைம்பெண் தங்கம்மாவின் ஆதனம். மேற்கு மேரி டவளரத்தினம் பெண் அரியரத்தினம் மேதரின் ஆதனம் தெற்கு றோட்டு.

பதிவு இலக்கம் E 1253/289.

ச. அ. மரியாம்பிள்ளை,
28/2. மூன்றும் குறுக்கு வீதி, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்,
யாழ்ப்பாணம், (எம். 297 10-11-67.)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கதிர்காமு அப்புத்துரை உரும்பிராய்
இல M B 7906 எதிராக — வழக்காளி.
1. பொன்னு ஆறுமுகமும் மனைவி 2. தங்கம்மா
இணுவில் கிழக்கு இணுவில் — எதிரிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு M B. 7906-ஆம் இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் இருகாணிகளை 1967-ம் ஆ மார்கழி மீ 2-ந் உ சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— ரூபா 3941-66-ம் 24-12-65 தொடக்கம் 2-11-66 வரையில் ரூபா 3000 க்கு 10 வீத வட்டியும் அதன் பின் பணம் முற்றாக இறுபடும் வரை முழுக்கூட்டுத் தொகைக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 290-80 ம் இந்தக் காணிகளை 1962 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 4-ம் திகதி 7182 ஆம் இலக்கம் கொண்ட சட்டுறுதியால் ரூபா 6000-ம் 10 வீத வட்டிப்படி முதலீடாகக் கொடுபட்டிருக்கிறது.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு உடுவில் கோவில்பற்று இணுவில் இறை "கொக்கன்" பரப்பு நில லாச்சம் 14-ம் கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும். இக் காணி 14 பரப்பிற்கு எல்லை கிழக்கு தம்பிப்பிள்ளை செல்லையாவினதும் பங்காளர்களுடையவும் ஆதனம். வடக்கு சின்னத்தம்பி கந்தையாவினதும் கார்த்திகேசு பெண் நாகம்மாவினதும் ஆதனம். மேற்கு செல்லர் ஆறுமுகத்தினதும் சங்கரப்பிள்ளை பெண் வயிரவிப்பிள்ளை பெண் வயிரவிப்பிள்ளையின் உரிமைக்காரரின் ஆதனம். தெற்கு சங்கரப்பிள்ளை பெண் வயிரவிப்பிள்ளையினதும் வேதவனம் கதிராமரினதும் ஆதனம். இதடங்கலில் சொரியலாய் பரப்பு நில லாச்சம் 5 குளி 15-ம் இதைச் சேர்ந்தவைகளும்.

2. ஷெ இறை 'நீலாக்கம்பன் ஓடை குளி 6½ இதற்கெல்லை கிழக்கு செல்லையா இராசதுரையின் ஆதனம். வடக்கு பொன்னு ஆறுமுகத்தினதும் பெண் தங்கம்மாவினதும் ஆதனம். பங்காளர்களுடையவும் ஆதனம். மேற்கு அம்பலவாணர் ஆறுப்பிள்ளையின் ஆதனம். தெற்கு ஒழுங்கை. இதடங்கலும் ஒழுங்கையாகப் போக்குவரவு செய்ய உரித்தும்.

"முருகன் இல்லம்" க. செல்வத்துரை,
இணுவில், 19-10-67. கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
எம். 298, 10—11—)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. முத்துக்குமாரு ஆறுமுகதாசம் பெண்
2. இராஜேஸ்வரி இருவரும் உரும்பிராய் —வழக்காளிகள்.
வழக்கு இல. M. B. 7811 எதிராக
பொன்னு ஆறுமுகம் ஊரெழு — எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 7811-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 2 துண்டுக் காணிகளை 1967-ம் ஆ மார்கழி மீ 13-ந் உ புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 4574-30 சதம். 16-11-65 தொடக்கம் 5-7-36 வரைக்கும் ரூபா 3500-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 279-80 சதம். ஏற்பட்ட செலவு ரூபா 175-85. வெளியாத்துச் செலவு ரூபா 51-50 ஏற்படக்கூடிய செலவு ரூபா 52-45.

### ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று சுன்னாகம் இறை 'கிறியாத்தோப்பை' இதன் விஸ்தீரணம் கிலப்பரப்பு 12½, குறிப்பிட்ட கிலப்பரப்பு 12½ க்கு எல்லை கிழக்கு பொன்னம்பலம் பெண் இராசம்மாவின் ஆதனம். வடக்கு அப்பாத்துரை பெண் முத்துப்பிள்ளையின் ஆதனம். மேற்கு றோட்டு. தெற்கு எதிராளிக்குச் சொந்தமான ஆதனம். இந்த கிலத்திற்குத் தெற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் அரை (½) பங்கும் இந்த கிலத்தில் சொரியலாய் அரை (½) பங்கும். அதைச் சேர்ந்தவைகளில் சொரியலாய் அரை (½) பங்கும்.

(2) ஷெ சுன்னாகம் இறை 'கிறியாத்தோப்பை' இதன் விஸ்தீரணம் கில பரப்பு 12¾, குறிப்பிட்ட கில பரப்பு 12¾ க்கு எல்லை கிழக்கு பொன்னம்பலம் பெண் இராசம்மாவின் ஆதனம். வடக்கு எதிராளிக்குச் சொந்தமான ஆதனம். மேற்கு றோட்டு தெற்கு செல்லப்பா இரத்தினத்திற்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம். இது முழுவதிலுமிருந்து சொரியலாய் அரை (½) பங்கும். வடக்கு எல்லையில இருக்கும் கிணற்றில் அரை (½) பங்கும் சேர்த்து.

வே. கோபாலபிள்ளை,
22. ஆஸ்பத்திரி வீதி, கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். 26-10-67 (எம் 302. 10-11-67)

குழவி வெண் பிறை மிலைச்சி யோற் குணித்த மாதவத்தின்
இழை தடம்புன லருவி தாழிமைய மீன்றளித்த
மழை மதர்த்த கண்மரகதப் பசும்பிடி பயந்த
தழை மடற் செவித் தந்தி போற் சரணமே சரணம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், பிரம்மஸ்ரீ க. செ. பாலசுப்பிரமணியஐயர் புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம் அவர்களால், 10—11—1967 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக்கோடு
தெல்லிப்பளை மேற்கு, காசிப்பிள்ளை விநாயகமூர்த்தி —வழக்காளி
இல. M B 7557 எதிராக
1. தெல்லிப்பளை மேற்கு, எஸ். காசிப்பிள்ளை கைப்பெண் பூதாத்தைப்பிள்ளை. 2. ஷெ யூர் காசிப்பிள்ளை செல்வநாயகம்,
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 7557-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டுதுண்டுக்காணிகள் 1967-ம் ஆ மார்கழிமீ 10-ந் உ ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 1830/-ம் 16-7-1965 தொடக்கம் 8-3-1966 வரைக்கும் ரூபா 1830-க்கு 5 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 322/35 சதம் இதல் ரூபா 600 12-1-67 ல் கொடுபட்டது.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளைக் கோவில்பற்று தெல்லிப்பளை மேற்கிறை "குழந்தையன் புதுக்காடு" பர. கில. இலா பதின்மூன்று குளி, பதினேழுடன் எட்டிலைந்து, [பர. கில. இல 13 குளி 17, 5/8] எல்லை: கிழக்கு சங்கரப்பிள்ளை பெண் செல்வநாயகிப்பிள்ளையின் உரிமைக்காரர்கட்குரியவாதனம். வடக்கு மைக்கேல் கைத்தானுக்கும் பங்காளர்கட்குமுரிய வாதனம், மேற்கு சிதம்பரப்பிள்ளை ஏகாம்பரம் பிள்ளைக்குரியவாதனம் தெற்கு விநாயகர் சின்னக்குட்டிக்குரியவாதனம் இதடங்கலும். இதன் பதிவு. H. 252/139.

2. ஷெ தெல்லிப்பளை மேற்கிறை "தையிட்டி புலம்" பர. கில. இல. ஒன்பதுடன் எட்டில் மூன்று (9, 3/8) செய்பயிர் வான்பயிர்களும் கிழக்கிலிருக்கும் கிணற்றிலும் தண்ணீர் உயர்த்தும் இயந்திரத்திலும் பாகமும் வழிவாய்க்காலுரித்தும். எல்லை: கிழக்கு ஒழுங்கையும் நாராயணபிள்ளை பொன்னம்பலத்திற்குரியவாதனமும். வடக்கு சொல்லப்பட்ட பொன்னம்பலத்திற்கும் சிற்றம்பலம் பெண் சிவகாமிப்பிள்ளைக்குமுரியவாதனம். மேற்கு கனகரெத்தினம் பெண் சீனிப்பிள்ளைக்குரியவாதனம். தெற்கு நாராயணபிள்ளை இராசிங்கருக்குரிய வாதனம். இதடங்கலும்.

இதன் பதிவு. H 2152/140

காரைநகர், 1967-ம் ஆ வை. ஏரம்பமூர்த்தி,
Commissioner, Valuer & Licensed Auctioneer
ஐப்பசி மீ 12-ம் திகதி. கொம்மிஷனரும் ஏலவிற்பனையாளரும்.
எம். 266, 10—11— ]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சுட்டையா குமாரசாமி சர்மா அனலதீவு —வழக்காளி
இல. M B. 7761 எதிராக
1. ஆறுமுகம் பரம்சோதி 2. மனைவி சரோஜினி இருவரும் அனலதீவு — எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 7761-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக்காணி 1967-ம் ஆ மார்கழி மீ 18-ந் திகதி திங்கட் கிழமை (18-12-67) பிற்பகல் 2 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 1063/-ம் 18-10-65 தொடக்கம் 11-11-66 வரைக்கும் ரூபாய் 500-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 288/45 (ஏற்பட்ட செலவு 193,70 வெளியாத்துச் செலவு 51/— இனிமேல் ஏற்படுஞ் செலவு 43/75)

### ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி அனலதீவு கோவிற்பற்று அனலதீவு இறை "வாறவாலும், பொருக்குவயல்" நெற்பர. 10 இதில் பிறிக்கப்படாத அரைப்பங்கு எல்லை: கிழக்கு பிள்ளையார்கோவிலினுதனம். வடக்கு ஆறுமுகம் பெண் நாகமுத்துவும் செல்லப்பா சபாபதியினுதனமும். மேற்கு வாய்க்கால் தெற்கு விசுவநாதர் பெண் கமலத்தின் ஆதனமும் உண்டு.

நம் 35/2, கொழும்புத்துறை வீதி, இ. கனகரத்தினம்.
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், கொமிஷனரும் விலைமதிப்பாளரும்,
எம். 296. 10-11—)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கதிரவேலு இரத்தினம், புங்குடுதீவு — வழக்காளி
இல. M. B. 7341 எதிராக
1. விசுவலிங்கம் வேலாயுதமும் மனைவி 2. கனகாம்பிகை புங்குடுதீவு கிழக்கு —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 7341-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணிகளை 1967-ம் ஆ மார்கழி மாதம் 5-ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—ரூபா 1600-ம் 2-4-65 தொடக்கம் 1-3-66 வரையில் ரூபா 750-க்கு 18 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்றாக இறுபடும் வரையில் முழுக் கூட்டுத் தொகைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 261-ம்

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி புங்குடுதீவுகோவில்பற்று புங்குடுதீவு கிழக்கிறை "தனியானுக்குமில்லங்கம்" பர. கில லாச்சம 40 இதற்கு எல்லை கிழக்கு விசுவலிங்கம் வேலாயுதத்தினதும் பங்காளர்களினதும் ஆதனம் வடக்கு பழம் றோட்டு மேற்கு றோட்டு தெற்கு வேலாயுதர் சுப்பிரமணியத்தின் ஆதனம் இதில் சொரியலாய் பர. கில. லாச்சம் 6-ம் குளி 14-ம் முற்பதிவு C. 276/109.

2. ஷெ இறை "கண்டுதேவன் உககுமி" பரப்பு. கில. லாச்சம் 3-ம் வீடும் பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கும், வடக்கும், தெற்கும், சண்முகம் மனைவி செங்கமலத்தினுதனம் மேற்கு ஐயம்பிள்ளை வயித்திலிங்கத்தினதும் பங்காளர்களினதும் ஆதனம் முற்பதிவு. C. 251/72.

3. ஷெ இறை "தனியானுகபூமி" பர. கில. லாச்சம். 12 குளி 7-ம் பயிர்களும். இதற்கு எல்லை கிழக்கு அம்பலவாணர் மனைவி சிவயோகத்தினது ஆதனம் வடக்கு ஆறுமுகம் நரசிங்கத்தினது ஆதனம் மேற்கு வேலாயுதம் மனைவி கனகாம்பிகையினதும் பங்காளர்களினதும் ஆதனம் தெற்கு வேலாயுதம் சுப்பிரமணியத்தினதும் மற்றும் பெயர்களுடையவும் ஆதனம் இதில் சொரியலாய் ½ பங்கு. முற்பதிவு. C. 246/258.

க. செல்லத்துரை,
"முருகன் இல்லம்" கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்
இணுவில், 4-11-67 எம் 299 10-11-67

## சமயப் பிரசாரம்

திருமுருக; கிருபானந்தவாரியார்:

கொழும்பு ஜெயந்திநகர் (ஜிந்துப்பிட்டி) ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமிகோவிலில் எதிர்வரும் கார்த்திகை மீ 8-ந் திகதி 24-11-67 மாலை 6 மணிக்கு மதுரை ஆதீன மகா வித்துவான், அருள் மொழிஅரசு, திருமுருக கிருபானந்தவாரியார் (ஆசிரியர், 'திருப்புகழ்அமிர்தம்') அவர்களது தொடர்ச்சிச் சொற்பொழிவு நடைபெறும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வே. கா. கந்தையா சிவஞான சுந்தரம் காரைநகர் கிழக்கு —வழக்காளி
இல. M B. 8240
எதிராக
முருகர் நாகமணி காரைநகர் கிழக்கு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 8240-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும்துண்டுக்காணி 1967 ம் ஆ (2-12-67) டிசம்பர் மீ 2ம் திகதி சனிக் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 5010/-ம் 21-6-66 தொடக்கம் 28-1-67 வரைக்கும் ரூபாய் 4000-க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 345-58.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு கிழக்கு "பிட்டி ஓலை" பரப்பு நில, லாச்சம். 2-ம் குளி 7-ம் பனைகளும் எல்லை: கிழக்கு ஒழுங்கைக்காகவுரிய கீழ்க்காணும் 3ம் காணி வடக்கு இராமலிங்கம் வேலுப்பிள்ளைக்கும் பங்காளர்களுக்கும் கந்தையா நாகமணிக்கும் உரியவாதனம் மேற்கு கனகசபை கைம்பெண் செல்லம்மாவுக்குரிய ஆதனம் தெற்கு ஆறுமுகம் தில்லையம்பலத்துக்கும் முருகர் தம்பையாவுக்கும் உரியவாதனம்.

2. மேற்படி இறை பிட்டி ஓலை பரப்பு. நில. லாச்சம். 2¾ வீடுகளும் வடலிகளும் பனைகளும் வான்பயிர் செய்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு கார்த்திகேசு அம்பலவாணர்க்குரிய ஆதனமும் வடக்கு ஒழுங்கையாக இருக்கும் கீழ்க்காணும் 3-ம் ஆதனமும் முருகர் தம்பையாவுக்குரிய ஆதனமும் மேற்கு ஆறுமுகம் தில்லையம்பலத்துக்குரிய ஆதனம் தெற்கு கீழ்க்காணும் 4-ம் ஆதனம்.

3. மேற்படி இறை பிட்டிஓலை 11½ குழி இதற்கு எல்லை கிழக்கு கார்த்திகேசு அம்பலவாணர்க்கும் மார்க்கண்டு பெண் இராசம்மாவுக்கும் உரிய ஆதனம் ஒழுங்கைமுகப்பும் மேற்கு ஒழுங்கைமுகப்பும் இராமலிங்கம் வேலுப்பிள்ளைக்குரியவாதனம் தெற்கு மேற்காட்டிய 2-ம் காணி ஆகும், கார்த்திகேசு அம்பலவாணருக்கும் மகளுக்கும் இக்காணிக்கு ஊடாகப் போக்குவரவு செய்ய உரித்தும்.

4. மேற்படி இறை பிட்டி ஓலை பரப்பு. நில. லாச்சம் 3¼-ம் பனைகளும் எல்லை: கிழக்கும் தெற்கும் கைம்பெண் பொன்னுப்பிள்ளைக்கும் உரிய ஆதனம் மேற்கு தில்லையம்பலம் வயித்திலிங்கத்துக்கும் ஆறுமுகம் தில்லையம்பலத்துக்குமுரிய வாதனம் வடக்கு மேற்காட்டிய 2-ம் ஆதனம்.

சி. செ. மாரிமுத்து,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
விதானை வளவு, சித்தன்கேணி
24-9-67 (எம் 301 10-11-67)